# குறுந்தொகையில் நெய்தல் பண்பாடு

*ச. ரேணுகா*
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), தமிழ் உயராய்வுத் துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்

*முனைவர் மொ. இரவிக்குமார்*
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத் துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்
https://doi.org/10.5281/zenodo.14383242

**ஆய்வுச் சுருக்கம்**

*பண்டைத் தமிழரின் வாழ்வியலை அறிய செப்பேடுகள், கல்வெட்டுகள், இலக்கியங்கள் மற்றும் புழங்கு பொருட்கள் அடிப்படையாக அமைகின்றன. இலக்கியங்களில் பதினெண் மேற்கணக்கு நூல்களாக எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் விளங்குகிறது. இலக்கண நூல்களில் பழமையானதாக அகத்தியம் கருதப்பட்டாலும் அந்நூல் கிடைக்கப்பெறவில்லை. இலக்கண நூல்களில் தொல்காப்பியம் அடிப்படைகளை சுட்டும் நூலாக எண்ணப்படுகிறது. தொல்காப்பியர் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று திணைக்குரிய பொருட்களை வகைப்படுத்தியுள்ளார். அவற்றுள் நிலமும் பொழுதும் முதற்பொருளாகும். தொல்காப்பியர் கூறும் முதற்பொருள், கருப்பொருள், மற்றும் உரிப்பொருள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும், எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டும் நெய்தல் நிலத்தின் பண்புகளை ஆய்வதாக இவ்வாய்வு கட்டுரை அமைகின்றது.*

**முன்னுரை**

*மக்களுக்கு அடிப்படைத் தேவையாக இருந்ததும், இருப்பதும் உணவு. அனைத்திற்கும் அடிப்படையாக பசியும் அதன் பொருட்டு தேடல், உற்பத்தி என்பதும் தொடர்ந்தது (உங்கள் நூலகம், இதழ் 10, ப.72) இதன் மூலம் தொடக்க கால மனிதன் தனது உணவுத் தேவைக்காக விலங்குகளை வேட்டையாடினான். வேட்டையின் போது விலங்குகளின் பலம் தெரிந்தது. அதனால் விலங்குகளின் மீது அச்சம் ஏற்பட்டது. மனிதன் அச்சத்தின் காரணமாக ஓரிடம் விட்டு வேறொரு இடம் தேடிச் சென்று வாழ்க்கையை வாழ்ந்தான். அப்போதும் பயம் தீராததால் மக்களோடு சேர்ந்து ஒரு குழுவாக வாழ ஆரம்பித்தான். பலர் சேர்ந்து வாழும் போது விலங்குகளை வீழ்த்துவது எளிமையானதாக இருந்திருக்கலாம். அதனடிப் படையில் முதற்பொருள், கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் வாயிலாக நெய்தல் நில மக்களின் வாழ்வியல் கூறுகளை குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள முதல் ஐம்பது பாடல்கள் மற்றும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. தொல்காப்பியத்தில் நிலம். நிலத்தைக் குறிக்கும் சொல்லாகப் பழங்காலத்தில் திணை என்றச் சொல்லை பயன்படுத்தியுள்ளனர் என்பதை, திணை என்னும் சொல்லுக்கு நிலம், குலம், ஒழுக்கம் என்பன பொருளாகும் (தொல். சொ. ப. 12) என்ற இளம்பூரணர் உரையின் மூலம் அறிய முடிகின்றது.*

இன்று கிடைக்கப்பெறும் இலக்கண நூல்களில் பழமையானதாக கருதப்படுவது தொல்காப்பியம். ஆனால் இலக்கியங்களில் இருந்து தான் இலக்கணம் உருவாக முடியும்.

***இலக்கிய மின்றேல் இலக்கண மின்றே:***
***எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே***
***எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல***
***இலக்கி யத்தினின்று எடுபடும் இலக்கணம்.***
***(தமிழ் இலக்கிய வரலாறு.ப.3)***

எனவே தொல்காப்பியம் என்ற இலக்கண நூலுக்கு முன்பே பல இலக்கியங்கள் இருந்தன என்பது தெளிவாகின்றது.

***அதுமட்டுமல்லாமல் தொல்காப்பிய நூற்பா,***
***கண்ணிமை நொடி என அவ்வே மாத்திரை***
***நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறு***
***(தொல்.எழுத்து..7)***

உண்மையான பொருளை உணர்ந்து கண்டவர்கள் கூறுகின்றனர் என்று சுட்டியுள்ளார். இதன் மூலம் பல இலக்கிய இலக்கண நூல்கள் சங்ககாலத்திற்கு முன்பு இருந்திருக்க வேண்டும் என்பதை அறிய முடிகின்றது. எனவே, தொல்காப்பியத்தை அணுகாமல் சங்க இலக்கியத்தை பேசுவது இயலாத ஒன்றாக கருதப்படுகின்றது.

***குறுந்தொகையில் முதற்பொருள்;***
***முதலெனப்படுவது நிலம் பொழு திரண்டின்***
***இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே***
***(தொல்.பொருள்.4)***

இவ்வாறு நிலத்தின் இன்றியமையாமையை உணர்ந்த தொல்காப்பியர், முதற் பொருளாக கூறியுள்ளது நிலமும் பொழுதும் ஆகும்.

ஐந்திணை என்று ஐவகை நிலங்களை கூறுகின்றார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகியவை ஐந்து நிலங்கள் ஆகும். அவற்றில் ஐந்து திணைகளில் நான்கு மட்டுமே நிலம் பெறும் என்றும் கூறுகின்றார்.

***அவற்றுள்***
***நடுவண் ஐந்திணை நடுவனது ஒழியப்***
***படுதிரை வையம் பாத்திய பண்பே***
***(தொல்.பொருள்.2)***

என்ற நூற்பாவின் மூலம் நான்கு திணைகள் மட்டுமே நிலம் பெறும் என்பதை அறிய முடிகின்றது. அந்நிலங்களின் பெயர்களைத் தொல்காப்பியர்,

***மாயோன் மேய காடுறை உலகமும்***
***சேயோன் மேய மைவரை உலகமும்***
***வேந்தன் மேய தீம்புனல் உலகமும்***
***வருணன் மேய பெருமணல் உலகமும்***
***முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்***
***சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.***
***(தொல்.பொருள்.5)***

என்று குறிப்பிடுகிறார். நிலங்களின் பெயர்களைப் பற்றி கூறும் இந்நூற்பாவின் மூலம் நிலங்கள் நான்கு மட்டுமே அவை முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பதை கூறியுள்ளார். மேலும் சிலப்பதிகாரம்,

***முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து***
***நல்லியல்பு இழந்து நடுங்கு துயர் உறுத்துப்***
***பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்***
***(சிலம்பு.காடு.காதை.பா.64)***

எனும் வரிகளின் மூலம் மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சியும், காடும் காடு சார்ந்த இடமுமான முல்லையும் தன் இயல்பில் இருந்து திரிந்து பாலை என்ற நிலப்பகுதி உருவானது குறித்து விளக்குவதை அறிய முடிகிறது.

***குறுந்தொகையில் நெய்தல் நிலத்துக்கான பொழுது;***
***பொழுதை தொல்காப்பியர் பெரும்பொழுது, சிறுபொழுது என்று இரண்டாக கூறுகிறார். பெரும்பொழுது என்பது ஓராண்டைக் குறிக்கும். சிறுபொழுது ஒரு நாளைக் குறிக்கும்.***
***ஏற்பாடு***
***நெய்தல் ஆதல்மெய் பெறத் தோன்றும்***
***(தொல்.பொருள்.10)***

நெய்தல் திணைக்குரிய பெரும் பொழுதுகள் இளவேனில், முதுவேனில்,கார், கூதிர்,முன்பனி, பின்பனி என்ற ஆறு பொழுதுகளையும் பெற்று வரும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். நெய்தல் நிலத்திற்கான சிறுபொழுது எற்பாடு. எற்பாடு என்பது சூரியன் மறையும் நேரத்தை குறிக்கும்.

***நள்ளென்ற றன்றே, யாமம்; சொல் அவிந்து***
***இனிதுஅடங் கினரே, மாக்கள்; முடிவு இன்று***
***(குறுந்.பா.6)***

இப்பாடல் தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது. தலைவன் பிரிந்து சென்றதால் ஊரிலுள்ள அனைவரும் தூங்கியும் தன்னால் தூங்க முடியவில்லை என்ற தன் நிலையைத் தோழியிடம் கூறுவதாக அமைந்துள்ளது.

***முல்லைத்திணை ஆறு பெரும் பொழுதுகளும் பெற்று வரும்.***

***நெய்தல் நிலத்திற்கான கருப்பொருள்;***

***வதிக்குறுகு உறங்கும் இன்நிழற் புன்னை***
***உடைத்திரைத் திவலை அரும்பும் தீம்நீர்***
***(குறுந்.பா.5)***

இப்பாடல் தலைவி தன் தலைவனின் ஊரை பற்றி கூறுவதாக தொடங்குகின்றது. குருகுப் பறவை உறங்குகின்ற புன்னை மரத்தின் நிழல் கடலில் நீர் அலைகளின் மீது விழுகின்ற நாட்டின் தலைவன் என்று தலைவனின் நிலச்சிறப்பு போற்றப்படுகின்றது.

இதன் மூலம் நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த இடம் என்பதும் புன்னை மரங்கள் வளர்ந்திருந்தது என்பதும் அறியலாகிறது.

***அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து***
***மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப! (குறுந்.பா.49)***

அணிலுடைய கூர்மையான பற்களை ஒத்த கழிமுள்ளிச் செடியானது நீரில் நனைந்த பிறகு தனது நாற்றம் போய் சிறப்பு பெறுகின்றது. அதுபோல தலைவனும் பரத்தைக்குச் சிறப்பைத் தருகிறான் என்ற கருத்து தலைவி கூற்றாக அமைகின்றது.

இப்பாடலில் கடல் நீர் குறிக்கப் பெற்றுள்ளது. இது நெய்தல் நிலம் என்பது அறியலாகின்றது.

***இன்னா உறையுட்டு ஆகும்***
***சின்னாட்டு அம்ம - இச்சிறுநல் ஊரே(குறுந்.பா.55)***

இப்பாடலின் பொருள் இச்சிறிய நல்ல ஊரானது கருநெய்தற் பூக்கள் குவியும் நீல கடற்கரையைக் கொண்டது என்று தோழி கூறுகின்றாள்.

இதன் மூலம் நெய்தல் நிலத்தில் நெய்தல் பூக்கள் பூத்ததை அறிய முடிகின்றது.

இப்பாடல்களின் மூலம் நெய்தல் நிலமானது கடலும் கடல் சார்ந்த இடம் என்பதும் இங்கு புன்னை மரங்கள் இருந்ததும் நெய்தல் பூக்கள் பூத்திருந்தது என்பதும் உறுதி செய்யப்படுகின்றது.

***நெய்தல் நிலத்திற்கான உரிப்பொருள்;***

***புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்***
***ஊடல் அவற்றின் நிமித்தம் என்றுஇவை***
***தேருங் காலை திணைக்குஉரிப் பொருளே***
***(தொல்.பொருள்.16)***

இதன் மூலம் குறிஞ்சி கூறிய உரிப்பொருள் புணர்தல் என்பதும், பாலைக்குரிய உரிப்பொருள் பிரிதல் என்பதும், முல்லைக்குரிய உரிப்பொருள் இருத்தல் என்பதும், நெய்தலுக்குரிய உரிப்பொருள் இரங்கல் என்பதும், மருதத்திற்குரிய உரிப்பொருள் ஊடல் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக நெய்தலுக்கான

***உரிப்பொருள் இரங்கல் என்பது தெளிவாகின்றது.***

***இம்மை மாறி மறுமை ஆயினும், நீஆகியர் என் கணவனை;***
***யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே!***
***(குறுந்.பா.49)***

இப்பாடலின் பொருள் பரத்தையிடம் சென்று வந்த தலைவனை சந்தித்த தலைவி கூறியதாக அமைகின்றது. இந்த பிறவி மாறி அடுத்த பிறப்பிலும் நீயே என் கணவனாக அமைவாயாக என்று கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

***நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே!***
***இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி***
***அமைதற்கு அமைந்தநம் காதலர்***
***அமைவிலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே!***
***(குறுந்.பா.4)***

இப்பாடல் தோழி தன்னை கண்டு வருந்துவதை அறிந்த தலைவி கூறுவதாக அமைந்துள்ளது. தலைவன் என்னை விட்டு பிரிந்து இருப்பினும் என் நெஞ்சு அவர் மீது கொண்ட அன்பை நினைத்துக் கொண்டே ஆற்றி இருக்கும் என்று தலைவி தோழியிடம் கூறுகின்றாள்.

***பிள்ளை உள்வாய்ச் செரீஇய***
***இரைகொண் டமையின், விரையுமால் செலவே!***
***(குறுந்.பா.92)***

இப்பாடல் தலைவன் பிரிவு துயரைத் தாங்காத தலைவி மாலை நேரத்தில் மனம் வருந்திக் கூறியதாக அமைந்துள்ளது.

*யானே ஈண்டை யேனே; என்பவரே*
*ஆனா நோயொடு கான லஃதே*
*குறைவின் தம்பி ரானே,*
*மறை அவர் ஆகி மன்றத் தஃதே! (குறுந்.பா.97)*

*தலைவி தன் தோழியிடம், "என்னை களவில் உறவாடிய தலைவன் அவனது பெற்றோருடன் அவனது ஊரில் உள்ளான். நானோ தனிமையில் உள்ளேன். என்னுடன் ஏற்பட்ட களவு வெளிப்பட்டு ஊரலராகி விட்டதே' என்று வருந்துவதாக அமைந்துள்ளது.*

**முடிவுரை**

- *தொல்காப்பியர் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை வகுத்து கூறியுள்ளார்.*
- *தொல்காப்பியர் முதற்பொருட்களாக நிலமும், பொழுதும் அமைவதை சுட்டுகின்றார்.*
- *நிலத்தை நான்கொடு ஒன்று ஐந்து, வகையாக பகுத்து கூறியுள்ளார்.*
- *குறுந்தொகை, தொல்காப்பியர் கூறும் ஐந்திணை என்ற திணை அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளது. எனவே நிலம் என்பது நூலில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது.*
- *நெய்தல் திணைக்குரிய பெரும் பொழுதுகள் இளவேனில், முதுவேனில், கார், கூதிர்,முன்பனி, பின்பனி என்ற ஆறு பொழுதுகளையும் பெற்று வரும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார்*
- *குறுந்தொகையில் ஆறு பொழுதுகளையும் பாடல்களின் வழி அறிய முடிகின்றது.*
- *நெய்தல் நிலத்திற்கான சிறுபொழுது எற்பாடு. குறுந்தொகை பாடல் வெளிபடுத்துவதன் மூலம் சிறு பொழுது உறுதிசெய்யப்பட்டுள்ளது.*
- *குறுந்தொகை மூலம் நெய்தல் நிலமானது கடலும் கடல் சார்ந்த இடம் என்பதும், இங்கு புன்னை மரங்கள் இருந்ததும், நெய்தல் பூக்கள் பூத்திருந்தது என்பதும் உறுதி செய்யப்படுகின்றது.*
- *நெய்தலுக்குரிய உரிப்பொருள் காத்திருத்தல் (இரங்கல்) என்பது குறுந்தொகை பாடல்களின் மூலம் மெய்ப்பிக்கப்பட்டது.*
- *குறுந்தொகையில் குறிஞ்சி மற்றும் பாலை நிலப் பாடல்கள் அதிகமாக அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.*
- *அதேபோல், நெய்தல் நிலப் பாடல்கள் குறைவாக காணப்படுவதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.*

**பார்வை நூல்கள்**


1. *குறுந்தொகை மூலமும் உரையும், (உ.ஆ) புலியூர்கேசிகன், முதற்பதிப்பு 2021, குமரன் பதிப்பகம், கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை-600 017.*
2. *தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் மூலமும் உரையும்,(உ.ஆ) முனைவர் ச. திருஞானசம்பந்தம், முதற்பதிப்பு 2010, கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு-613 204.*
3. *தொல்காப்பியம் - சொல்லதிகாரம் மூலமும் உரையும், (உ ஆ) முனைவர் ச. திருஞானசம்பந்தம், முதற்பதிப்பு 2013, கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு-613 204.*
4. *தொல்காப்பியம்- பொருளதிகாரம் மூலமும் உரையும்,(உ ஆ)முனைவர் ச. திருஞானசம்பந்தம், முதற்பதிப்பு 2020, கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு-613 204.*
5. *வகைமை தமிழ் இலக்கிய வரலாறு, பேரா. முனைவர் பாக்யமேரி, முதற்பதிப்பு 2014, பூவேந்தன் பதிப்பகம், சீனிவாசா சாலை, மயிலாப்பூர், சென்னை-600 004.*
6. *நியூ செஞ்சுரியன் உங்கள் நூலகம், மாத இதழ், மலர் 14, இதழ் 10, ஜனவரி 2023.*